DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW-12

| Name : | சரிதாபாலு | Caste: | |
|---|---|---|---|
| Father Name | | Calling: | காவல் ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 46 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2025**

2-வது எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1-ம் எதிரி ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.06.2021-ம் தேதி பூவந்தி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் மாரிமுத்து என்பவரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு என்னுடைய மேல்விசாரணைக்கு வைக்கப்பட்ட பூவந்தி காவல்நிலைய குற்ற எண்.124/2021 பிரிவுகள் 302 இ.த.ச வழக்கின் கோப்பை பெற்று பார்வையிட்டேன். இவ்வழக்கை தொடர்ந்து என் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.00 மணிக்கு சம்பவ இடமான பாப்பாக்குடி பிள்ளையார்கோவில் ஊரணி அருகே உள்ள மண்புழு உர கிடங்கு செட்டிற்கு சென்று பிரேதத்தை பார்வையிட்டேன். பின்பு அங்கேயே வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பிருந்ததால் மு.நி.கா.2178 திரு.விக்னேஷ் என்பவர் மூலம் இவ்வழக்கில் இறந்துபோன இராமராஜனின் பிரேதத்தை அமரர் ஊர்தி மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு சம்பவ இடத்திலிருந்த சாட்சிகள் ஹரிகிருஷணன், பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.**17.-ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே சாட்சிகள் முன்னிலையில் இரத்தக்கரை படிந்த சிமிண்ட் தரை சிறிதளவும், இரத்தக்கரை படியாத சிமிண்ட் தரை சிறிதளவும் 9.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

சம்பவ இடமானது பூவந்தி காவல்நிலயத்திலிருந்து சுமார் 10கிமீ வடமேற்கு திசையில் அமைந்துள்ளது. பின்பு சாட்சிகள் முத்துலெட்சுமி, காளீஸ்வரி, இராமச்சந்திரன், ஹரிகிருஷ்ணன், பாலமுருகன், கருப்பசாமி, ஆகியோரை சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இராமராஜன் என்பவரின் இறப்பின் மீதான பிரேத விசாரணையை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 12.00

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2025.04.16 17:31:05 +0530

மணிக்கு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து 14.00 மணி வரை பிரேதவிசாரணை செய்து பிரேதபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுகோள் கடிதம் தயார் செய்து முநிக 2178 என்பவருக்கு கடவுச்சீட்டு கொடுத்து அனுப்பிவைத்தேன். மேற்படி நான் பிரேத விசாரணை செய்த அறிக்கை **அ.சா.ஆ.18**.-ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் ஜானகி, புவனேஷ்வரன், விக்னேஷ்வரன் ஆகியோர்களை பாப்பாகுடி கிராமத்தில் வைத்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி இவ்வழக்கின் எதிரிகளை 19.06.2021ம் தேதி 16.00 மணிக்கு கருங்குளம் கண்மாய்க்குள் பதுங்கியிருந்த எதிரிகளான சந்தோஷ், கணேஷ்குமார் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்து அவ்விடத்தில் 1-வது எதிரி சந்தோஷ் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சிகளான கிராமநிர்வாக அலுவலர் கருப்பசாமி, தலையாரி புஷ்பலதா ஆகியோர் முன்னிலையில் 16.15 மணிமுதல் 17.15 வரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும், 2-வது எதிரி கணேஷ்குமார் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை 17.15 மணி முதல் 18.15 வரை பதிவு செய்தும் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் TN63BJ5803 என்ற பதிவெண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை எதிரி ஆஜர் செய்ததை 18.20 மணிக்கு அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியும் ராமராஜனை வெட்டிக்கொலை செய்ய சம்பவத்திற்கு பயன்படுத்திய வாள் ஒன்றையும் 1-வது எதிரி சம்பவத்தின் போது உடுத்தியிருந்த ரத்தக்கரை படிந்த ஊதாகலர் ஜீன்ஸ் பெர்முடாஸ், நீலம் வெள்ளை கலர் கலந்த கோடு போட்ட சட்டை, 2-வது எதிரி கணேஷ்குமார் உடுத்தியிருந்த ரத்தக்கரை படிந்த ஊதா, வெள்ளை கருப்பு அரக்கு கலர் கலந்த கட்டம் போட்ட கைலி, இரத்தக்கரை படிந்த முழுக்கை சட்டையை 19.30 மணிக்கு பாப்பாகுடி அய்யனார் கோவில் கரை அருகே உள்ள வேலிக்கருவை மரத்தின் அடியிலிருந்து 1-வது எதிரி எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்கு மூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். எதிரிகள் மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் 21.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவித்தேன்.

பின்பு அன்றைய தினமே பிரேதவிசாரணை அலுவல் முடித்து நிலையம் வந்த காவலர் 2178 விக்னேஷ் பிரேதபரிசோதனையின் போது இறந்தவரிடமிருந்து மருத்துவரால் அகற்றப்பட்ட இரத்தக்கரை படிந்த ஊதா கைலி, டிசர்ட், அரக்கு டவுசர், ஆகியவைகளை படிவம் 91ல் அதே சமயம் 21.00 மணிக்கு கைப்பற்றினேன். பின்பு தக்க வழிக்காவல் மூலம் JM-2 சிவகங்கை நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் மாரிமுத்து என்பவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 20.06.2021ம் தேதி ராமச்சந்திரன், முத்துலெட்சுமி, ஆகியோரை பாப்பாகுடி கிராமத்தில் வைத்து விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அதை தொடர்ந்து மணிகண்டன், உச்சிமுத்து மற்றும் பெண்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.16 17:31:12 +0530

தலைமைக்காவலர் 973 தமிழரசி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் புலன்விசாரணை முடிக்கப்பட்டு சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும், விசாரணையிலிருந்தும், எதிரிகளின் ஒப்புதல் வாக்கு மூலத்திலிருந்தும் மேற்படி சம்பவமானது நடைபெற்றது உண்மை என தெரியவந்ததால் அன்றைய தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவை 302 இதச விலிருந்து 302, 364 இ.த.ச வாக மாற்றம் செய்தேன்.

மேற்படி வழக்கில் மாற்றம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.19**.-ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பின்பு 29.06.2021ம் தேதி JM-2 சிவகங்கை நீதிமன்றத்தில் இவ்வழக்கின் சொத்துக்களை ஒப்படைத்து பிஆர்எண்.15/21 பெற்றேன். பின்பு 02.07.2021ம் தேதி இவ்வழக்கின் சொத்துக்களை மு.நி.க.2178 விக்னேஷ் என்பவர் மூலம் இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் RMD/BIOL/200/2021 Dt.02.07.21, RMD/TOXH/522/2021 Dt.02.07.21 பிரகாரம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு 04.08.2021ம் தேதி கோவிந்தராஜ்,M.Sc., அறிவியல் அலுவலர் RFSL Ramnad என்பவரிடமிருந்து பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு அதன் மேல் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு முருகேசன்,M.Sc.,M.ed., அறிவியல் அலுவலர் RFSL Ramnad என்பவரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு அதன் மேல் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு JM-2 சிவகங்கை நீதிமன்ற தலைமை எழுத்தர் திரு.மாரிமுத்து அவர்கள் பி.ஆர்.எண்.1521 வழங்கியதற்காக அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு மு.நி.கா.2178 விக்னேஷ், கணினியில் இவ்வழக்கை பதிவேற்றம் செய்த மு.நி.க.செந்தில்குமார், சிவகங்கை ஆர்டிஓ. கண்காணிப்பாளர் தரேந்திரபூபதி என்பவரிடமிருந்து மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்திற்குரிய உரிமையாளரின் விவரங்களை கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அன்றைய தினமே மேற்படி வாகனத்தின் உரிமையாளர் விவரம் பெறப்பட்டு அதன் மேல் அவரை விசாரித்தும், மேற்படி வாகன உரிமையாளர் குறித்து பெற்ற பதிவு சான்று **அ.சா.ஆ.20**.-ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும், சிவகங்கை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.செந்தில்குமார் என்பவரிடமிருந்து பிரேதபரிசோதனை சான்று மற்றும் இறுதிக்கருத்துரை பெற்று பார்வையிட்டேன். அதில் இராமராஜனின் இறப்பானது After perusal of PM Report and FSL Report, I am of the final opinion deceased would appear to have died of shock and haemourage as a result of multiple chop injuries sustained deceased had consumed Ethyl alcohol at the time of death என்று கண்டிருந்தது அதன் மேல் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் நான் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவங்கள்-91 மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.21 முதல் 24** வரை என குறியீடு செய்யப்படுகிறது.

மேலும், 04.08.2021ம் தேதி இவ்வழக்கின் புலன்விசாரணை முடிக்கப்பட்டு எதிரிகள் இருவர் மீதும் இதச பிரிவுகள் 364, 302 படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.16 17:31:18 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் தன் மகன் வெட்டுபட்டு கிடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றதாக புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. 2வது சாட்சி காளீஸ்வரி என்பவரும் சம்பவ இடத்திற்கு சென்ற நேரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி இராமச்சந்திரன் இறந்து போன இராமராஜனை தனது பைக்கிள் கூட்டிச் சென்றதாக தனது முதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் கூட்டிச் சென்றதாக சொல்லியுள்ளார். ஆனால் பைக்கிள் கூட்டிச்சென்றதாக என்று சொல்லவில்லை. 2-வதாக கொடுத்த வாக்குமூலத்தில் தங்கள் கொடுத்த முதல் வாக்கு மூலத்தில் பைக்கிள் கூட்டிச்சென்ற விவரத்தை முதலில் ஏன் சொல்லவில்லை என்று அதற்கான காரணம் தனியாக கூறவில்லை என்றால் சரிதான்.

சாட்சி கருப்புசாமி என்ற வி.ஏ.ஓ எதிரிகள் என்னென்ன விதமான ஆடைகளை எடுத்து ஒப்படைத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த எந்த சாட்சிகளும் எதிரிகளிடமிருந்து என்னென்ன உடைகள் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் தான் மறுவாக்குமூலம் சாட்சிகளிடம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகள் மறுவாக்குமூலத்தில் கூறியுள்ள செய்திகள் ஒப்புதல் வாக்கு மூலத்திற்கு ஏற்ற வகையில் எங்களால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலில் பொருட்கள் எதுவும் கைப்பற்றாத காரணத்தால் பொருட்கள் கைப்பற்றியதாக காட்ட வேண்டும் என்பதற்காக சாட்சிகளிடம் மறுவாக்கு மூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த வழக்கு சான்றுபொருளும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகள் யாரும் சம்பவ இடத்தில் பைக் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இராமச்சந்திரன் தனது மறுவாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். மேற்படி இராமச்சந்திரன் சம்பவ சாட்சியாக இவ்வழக்கில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி புவனேஷ்வரன் தனது வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் பைக்கை பார்த்தாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

சம்பவ இடத்தில் எதிரிகளோ, இறந்த நபரோ செல் போன் பயன்படுத்தியதாக எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் செல் போன் டவர் லொக்கேசனை நாங்கள் சான்றாவணமாக சமர்பிக்கவோ, குறிப்பிடவோ இல்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முதல் நாள் இறந்த இராமச்சந்திரனை எதிரிகள் கூட்டிச்சென்றதாக எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.16 17:31:25 +0530

எதிரிகளுக்கும் இறந்தவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு பேசிக்கொண்டதாக செய்தி தெரிந்ததும், அது குறித்து புகார் எதுவும் வந்ததா என்றால் இல்லை. முதல் வாய் தகராறு குறித்த செய்திகள் தெரிந்தும் புகார் ஏன் கொடுக்கவில்லை என்று சாட்சிகளிடம் தனியாக வாக்குமூலம் எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. சாட்சி புவனேஷ்வரன் சம்பவத்தை முழுமையாக விளக்கி சொல்லாததால் அவர் சம்பவ சாட்சியாக ஜோடிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. ஒரு பகுதியை மட்டும் அவர் சாட்சியமாக கூறும் தன்மையை பார்க்கும் போது அவர் சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இறந்துபோன இராமராஜன் என்பவரது வீட்டிற்கு பின்புறம் பூபதி என்பவரின் வீடு உள்ளது என்பதை என் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். வழக்கு சம்ப்வம் பூபதியின் தோப்பிற்க்கு அருகில் என்றால் சரிதான். பூபதிக்கும் இறந்த இராமராஜனுக்கும் முன்விரோதம் காரணமாக ஏற்கனவே பிரச்சனை இருந்துள்ளது என்ற விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் அது பற்றி தெரியாது. இறந்து போன இராமராஜனுக்கும் பூபதிக்கும் இடையே ஏற்கனவே சொத்து பிரச்சனை தொடர்பாக முன்பகையும் தொடர் சண்டையும் இருந்து வந்துள்ளது என்றும், எனவே அவர் செய்த இந்த குற்றச்செயலை சரிவர புலன்விசாரணை செய்யாமல் சம்மந்தம் இல்லாத எதிரிகள் மீது சுமத்தி குற்றச்சாட்டு சமர்ப்பித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன இராமராஜனுக்கும் 1-வது எதிரி சந்தோஷின் தாயாருக்கும் இடையே தவறான தொடர்பு இருந்ததாகவும் அதனால் எதிரிக்கும் இறந்தவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்று சம்பவத்திற்கு முன்பாக புகார் எதுவும் தனியாக வந்ததா என்றால் இல்லை.

பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லும் ஆயுதத்தை காட்டி கருத்துரை கேட்கப்பட்டதா என்றால் இல்லை. நான் இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றும், அதன் பேரில் எந்தவித சான்றுபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கிற்கு தோதாக காவல்நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு அதன் பேரில் ஜோடிக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சமூகம் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைடபம் ஆகியவைகள் சம்பவ இடத்தில் தயாரிக்கப்படவில்லை காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரில்ல. வழக்கில் சாட்சிகள் யாரும் 161-ன் கீழான வாக்குமூலங்கள் என்னிடம் சொன்ன விதத்தில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.16 17:31:31 +0530

கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.16 17:31:38 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை